[1979 ஏப்ரல் 2

## திருக்கோயிலூர் வட்டத்தில் கூட்டுறவு சர்க்கரை ஆலை

*வினா எண் 600 —திரு. துரை முத்துசாமி : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாககளுக்கு விடையளிப்பாரா —

(அ) திருக்கோயிலூர் தாலுக்காவில் கூட்டுறவு சர்க்கரை ஆலை ஒன்று அமைக்கும் உத்தேசம் உண்டா ?

(ஆ) ஆம் என்றால் விபரம் என்ன?

மாண்புமிகு திரு, கி. மனோகரன் : (அ) இல்லை. ஆனால் உளுந்தூர்ப்பேட்டை தாலுக்கா பெரியசெவலை கிராமத்தில் ஒரு சர்க்கரை ஆலை அமைக்க அரசு ஆணையிட்டுள்ளது.

(ஆ) கேள்விக்கு இடமில்லை. முன்பு உளுந்தூர்ப் பேட்டை தாலுகா திருக்கோயிலூர் தாலுகாவின் கிளைத் தாலுகாவாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

## சர்க்கரை விலை

*வினா எண் 601— திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழ்நாட்டில் உள்ள சர்க்கரை ஆலைகளில் உற்பத்தியாகும் ஒரு டன் சர்க்கரைக்கு உற்பத்தி செலவு எவ்வளவு ?

(ஆ) மத்திய அரசு நிர்யிணத்துள்ள விலை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : (அ) தமிழ்நாட்டில் உள்ள சர்க்கரை ஆலைகளில் உற்பத்தியாகும் ஒரு டன் சர்க்கரைக்கு உற்பத்தி செலவு சுமார் ரூ. 2,080-லிருந்து ரூ. 2,93 0வரை உள்ளது.

(ஆ) மத்திய அரசு சர்க்கரைக்கு இருந்த கட்டுப்பாடுகளை 16—8— 1978 முதல் நீக்கிவிட்டது. எனவே தற்போது விலை ஏதும் நிர்ணயிக்கப்படுவதில்லை.

[முற்பகல் 9-30]

திரு. மு. அம்பிகாபதி : தமிழகத்தில் மட்டுமல்லாமல் இந்தியாவிலேயே சர்க்கரைத் தொழிலை அழித்துவிடும் முயற்சியில் அரசு ஈடுபட்டிருப்பதாகத் தெரிகிறது, ஒரு ஆலை என்றால் உற்பத்தி செய்கிற பொருளுக்கு விலை நிர்ணயம்

1979 ஏப்ரல் 2]

செய்து மத்திய அரசு உத்தரவாதம் அளித்து அந்தத் தொழிலைக் காப்பாற்ற வேண்டும், தமிழகத்தில் சர்க்கரைத் தொழில் நசித்து தொழிலாளர்கள் பாதிக்கப்படும் நிலைமை ஏற்பட்டுள்ளது தமிழக அரசுக்குத் தெரியுமா? அதைத் தடுத்து நிறுத்த ஏதாவது நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கி. மனோகரன்; சர்க்கரை ஆலைகளைப் பொறுத்தமட்டில் தமிழ்நாட்டில் ஒரு பெரிய சோதனைக் கட்டத்தை அவை சந்தித்துக் கொண்டிருக்கின்றன என்பது அரசுக்குத் தெரியும். எந்த அளவுக்கு அந்த சோதனைகளில் இருந்து அந்த ஆலைகளை மீட்டு உதவ முடியுமோ அந்த முயற்சியில் இந்த அரசு ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். மத்திய சர்க்கார் சர்க்கரை ஆலைகளையே ஒழிக்கின்ற உன்னதமான திட்டத்தில் ஈடுபட்டிருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனக்குத் தெரிந்த தகவலின் அடிப்படையில் தெரிவிக்கிறார். என்னிடம் அந்தத் தகவல் இல்லை.

டாக்டர் கே. சமரசம்; தமிழகத்தில் உற்பத்தியாகும் சர்க்கரைக்கு டன் ஒன்றுக்கு ரூ. 2,080ல் இருந்து 2,930 வரை செலவாவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படியானால் ஒரு டன் விற்பனை விலை எவ்வளவு? விற்பனை விலை குறைவாக இருந்தால் அரசு அதை ஈடுகட்ட என்ன முயற்சி எடுத்திருக்கிறது?

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: அதுபற்றித் தனி கேள்வி போடவும்.

திரு. சி. கோவிந்தராசன்; சர்க்கரைக்கு ஏற்கனவே இரண்டு விதமான விலைகள் இருந்து கொண்டிருந்தன. ஒன்று லெவி பிரைஸ், இன்னொன்று ஃப்ரீ மார்க்கட் பிரைஸ். இன்றைக்கு லெவி பிரைஸ் நீக்கப்பட்டுவிட்டது. சர்க்கரை ஆலை முதலாளிகள் அவர்கள் இஷ்டத்திற்கு விலை வைத்து விற்கக்கூடிய சூழ்நிலையை மத்திய சர்க்கார் உருவாக்கியிருக்கிறது. சர்க்கரை ஆலைகளுக்கு நஷ்டம் வருவதாகக் கூறி கரும்பு விவசாயிகளுக்குப் பணம் கொடுக்க மறுக்கிறார்கள். இதைத்தான் சோதனை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்களா? சோதனை இதுதானா?

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: அந்தச் சோதனைகளில் இதுவும் ஒன்று.

[1979 ஏப்ரல் 2

திரு. மு. அம்பிகாபதி : சர்க்கரைத்தொழில் கசப்பாக மாறிக் கொண்டிருக்கிறது. பல தொழிற்சாலைகளில் லட்சக் கணக்கான மூட்டை சர்க்கரை தேங்கிக் கிடக்கிறது. கரும்பு விவசாயிகளுக்குப் பணம் கொடுப்பதில் மிகுந்த தேக்கம் ஏற்பட்டிருக்கிறது. ஒரு கிலோ சர்க்கரை இங்கே மூன்று ரூபாய்க்கு விற்கிறது. இலங்கையில் ஒருகிலோ சர்க்கரை ரூ. 9ல் இருந்து 11 வரை விற்கப்படுகிறது. ஆகவே, சர்க்கரையை வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்ய சர்க்கார் ஷுகர் கேன் கார்ப்பரேஷன் மூலமாக ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் ; மாண்புமிகு உறுப்பினரவர்களின் சீரிய ஆலோசனை கவனத்தில் கொள்ளப்படும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : திரு. அம்பிகாபதி அவர்கள் மத்திய அரசாங்கம் சர்க்கரை ஆலைகளை ஒழித்துக் கட்டவேண்டுமென்ற திட்டத்தோடு செயல்படுவதாகக் கூறினார்கள். அப்படிப்பட்ட திட்டம் இருக்குமென்று சொன்னால் தமிழ் நாட்டில் பேட்டைவாய் சர்க்கரை ஆலையை மத்திய சர்க்கார் ஏற்று நடத்தத் தேவையில்லையென்பதை அரசு அறியுமா ? மத்திய சர்க்கார் 8.5 ரெகவரி இருந்தால் 100 ரூபாய் என்று விலை நிர்ணயம் செய்து வட மாநிலங்களில் 100 ரூபாய்க்கு அதிகமாக சர்க்கரை உற்பத்தியாளர்களுக்குக் கொடுக்கும் சூழ்நிலையில் இங்கு 100 ரூபாய் கூட கொடுக்காமல் 85 ரூபாய்தான் கொடுப்பதால் சிக்கல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் ; அரசுக்குத் தெரியும். இந்தப் பிரச்சினையை மத்திய சர்க்காரின் கவனத்திற்கு அரசு கொண்டுவந்திருக்கிறது.

திரு. வி. கோ. சின்னசாமி : தலைவர் அவர்களே' சர்க்கரை ஆலைகளில் சர்க்கரையை உற்பத்தி செய்கின்ற நேரத்திலே கிராமப்புறங்களிலே நாட்டுச் சர்க்கரை, கரும்பு வெல்லம் ஆகியவற்றை உற்பத்தி செய்கிற ஆலைகளையும் அமைப்பதற்கு அரசு ஏற்பாடுகளைச் செய்யுமா ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் ; அதுபற்றிப் பரிசீலிக்கப்படும்.

## MICRO Tools Limited, Madras

*Q. No. 602—Thiru R. UMANATH<br>
Thiru R. KRISHNAN<br>
Thiru V. K. KOTHANDARAMAN } Will the